1974 மார்ச் 11]

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்) : இந்த சப்ஸிடி 10, 15 சதவீதம் என்று கொடுக்கப்படுகிறது. அது தென் ஆர்க்காடு மாவட்டத்திலே ஒரு இடத்திற்குக்கூட ஒரு தாலூகாவிற்குக் கூடக் கொடுக்கப்படவில்லையே. அமைச்சர் அவர்கள் காடாம்புலியூர் பகுதியிலே இந்த 15 சதவீத அடிப்படையில் தொழில்களை ஆரம்பிப்பதற்கு முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தென் ஆற்காடு மாவட்டமும் பின் தங்கிய மாவட்டம் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. பல சலுகைகள் கொடுக்கப்படுகின்றன. அந்தப் பதினைந்து சதவீத முறை எப்படி தரப்படுகிறது என்று ஏற்கனவே நான் சொன்னேன். தென் ஆர்க்காடு மாவட்டம் பின் தங்கிய மாவட்டமாக இருந்தும் அதிலே சில பகுதிகள் மிக மிகப் பின்தங்கிய பகுதிகளாக இருந்தும் இந்த 15 சதவீதம் கொடுக்க முடியவில்லை என்பது உண்மை.

கடப்பாக்கத்தில் கயிறு தொழிற்சாலை.

* 361 வினா—திரு. வை. பாலசுந்தரம் : மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அச்சிறுபாக்கம் தொகுதியில் உள்ள கடப்பாக்கம் பகுதியில் “கயிறு தொழிற்சாலை” ஆரம்பிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

திரு. வை. பாலசுந்தரம் : தலைவர் அவர்களே, அச்சிறுபாக்கத் தொகுதியிலே அடங்கியுள்ள கடப்பாக்கம் எழில் குலுங்கும் தீவுத் திடலாகும். கேரளத்திலே இருக்கின்ற தீவு போல் இருக்கிறது. அந்த இடத்திலே ஒரு கயிறு தொழிற்சாலை அமைத்தால் சாலச் சிறந்ததாக இருக்கும் என்று அங்கு வாழ்கின்ற மக்கள் கருதுகிறார்கள். ஆகவே, அதை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கயிறு உற்பத்தி செய்கின்ற தொழிற்சாலைகளைப் பொறுத்தவரையில் நாம் ஸ்டேட் எய்ட் டு இண்டஸ்ட்ரீஸ் ஆக்டின் மூலமாக திட்டங்கள் வைத்திருக்கிறோம். சுமார் ரூபாய் ஒரு லட்சம் வரையில் சிறிய சிறிய தொழில்கள் உருவாக்குவதற்கு அனுமதிக்கப்படுகிறது. தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையிலே அந்த வகையிலே அனுமதிக்கப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட கோரிக்கைகள் அந்தப் பகுதியிலிருந்தும் வந்தால் கவனிக்கப்படும்.

திரு.கே. டி. கே. தங்கமணி : சார், கேரளத்திலே இந்தக் கயிறு தொழிற்சாலைகளை ஏற்படுத்த மிக விரிவான முறையிலே அந்த அரசாங்கம் உற்சாகம் கொடுத்துக் கொண்டு வருகிறது. தமிழ்நாட்டிலே இந்தத்

தொழில் விருத்தியடையக்கூடிய முறையிலே பாக்கெட்டுகள் இருக்கின்றன. அதைப் பரிசீலனை செய்து இந்தத் தொழிலுக்கு ஒரு கேந்திரமான இடம் கொடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கேரளத்தைப்போல் தமிழகத்திலேயும் தரப்படுகிறது. இதுபற்றிப் பல விஷயங்கள் இந்த மன்றத்திலே சொல்லப்பட்டு இருக்கிறது. நான் ஏற்கனவே சொன்னதைப் போல் தஞ்சாவூர் மாவட்டத்திலே 20 தொழிற்சாலைகள் உருவாக்குவதற்கு பிரம்மாண்டமான திட்டம் நிறைவேற்றப்பட்டது. இதைத் தொடர்ந்து வேறு எந்த எந்தப் பகுதிகளிலே அப்படிப்பட்ட முயற்சிகள் எடுக்கப்படுகின்றனவோ, அந்த அந்தப் பகுதிகளிலே பரிசீலனை செய்யப்பட்டு சிறிய சிறிய தொழில்கள் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

THIRU K. M. SUBRAMANIAM : Is there any proposal to mechanise the coir industry in Tamil Nadu, as it had been done in Kerala ? Does the Government think that if it is mechanised it will create unemployment problem ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்போது நான் சொன்ன உதவிகளே சிறிய அளவில் இயந்திர சாதனங்களுடன் தொடங்கப்படுகிறது. பெரிய அளவில் மெகனைஸ்டு ஸ்கீம் எடுத்தால் வேலைவாய்ப்புக் குறையலாம். ஒரு லட்சம் ரூபாய்த் திட்டம், கட்டிட வசதி, இயந்திர வசதி கொடுத்து, இந்த பைபரை எடுக்க ஏற்பாடு செய்யப்படுகிறது. இந்த பைபர் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்குக்கூட வாய்ப்பு இருப்பதனால் நாம் இந்தத் தொழிலுக்கு ஊக்கம் தந்து வருகிறோம்.

திருப்பூருக்கு துணை நீதிமன்றம்.

* 362 வினா—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் தயதுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா.—

திருப்பூரில் சப்-கோர்ட் அமைக்கும் செயற்குறிப்பு அரசு பரிசிலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

புதுக்கோட்டையில் மாவட்ட நீதிமன்றம்.

* 363 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டையில் மாவட்ட செஷன்ஸ் நீதிபதி கோர்ட்டு ஏற்படுத்தும் திட்டம் ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : புதிய புதுக்கோட்டை மாவட்டத்திற்கு மாவட்ட செஷன்ஸ் நீதி மன்றம் 14—1—1974 முதல் செயல்பட சனவரி 1974-ல் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.